6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கும் அஞ்சாமல், தீமைகளையும், தீய சக்திகளையும் வேரறுத்தும், முடியாததை முடித்து வைத்தும் ஏராளமான புதுமைத் திட்டங்கள்மூலம் பொற்கால ஆட்சி தந்து, தமிழகத்தைக் காத்து வருகிற தெய்வத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 186 முதல் 195 வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் விதியை, விதி எண் 110-ன்கீழ் முன்னேற்றிய தனிப்பெரும் தலைவியே, தாய்ப்பால் சேமிப்புத் திட்டத்தைத் தந்த தாய்மார்களின் தாயே, அம்மா உணவகம் தந்த தமிழக மக்களின் அன்னபூரணியே, மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கிய இளைய தலைமுறையின் இமாலய நம்பிக்கையே, தமிழக மக்களின் ஏற்றத்திற்காக மட்டுமே வாழும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

2015 ஆகஸ்ட் 27] [திரு. ஏ.கே. போஸ்]

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 173 முதல் 187 வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி,*

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)